சி.பி.எண்.27/2024 10.10.2025

மனுதாரர்.த.சாட்சி 1 வாசவி குறுக்கு விசாரணை

நான் 20.03.2013 முதல் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பேஸ்டிங் பிரிவில் நிரந்தர பணியில் பணிபுரிந்ததை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிர்வாகம் என்னை 16.07.2015 அன்று பணிநீக்கம் செய்தது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிர்வாகம் இந்த மனுவில் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்க்கவில்லை. அந்த பதிலுரையில் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியை தவறுதலாக நான் குறிப்பிட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் நான் தவறாக குறிப்பிடவில்லை சரியாக தான் குறிப்பிட்டுள்ளேன். நான் மனுவில் கூறியபடி எதிர்மனுதாரர் நிறுவனம் அந்த முகவரியில் செயல்படவில்லை என்றால் சரியல்ல. சுகா கார்மெண்ட்ஸ் மற்றும் சுகா கம்பெனி இரண்டும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல இரண்டு நிறுவனங்களும் ஒன்றுதான். சுகா கார்மெண்ட்ஸ் அந்த முகவரியில் செயல்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் சுகா கம்பெனிக்கும் இடையே முதலாளி தொழிலாளி என்ற உறவு இல்லை மேலும் அதற்கான ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மனுவை நிருபிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த மனுவானது காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்குடன் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு நிர்வாகம் சம்பளத்தை 12(3) மற்றும் 18(1) ஒப்பந்தபடி தான் வழங்கி வருகிறது என்றும் இதர சலுகைகளை அந்த ஒப்பந்தப்படி அமல்படுத்தவில்லை என்று நான் கூறியுள்ளேன் அதை காட்டுவதற்கு அந்த 12(3) மற்றும் 18(1) ஒப்பந்தங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த தேதி முதல் அந்த பலன்களை நிர்வாகத்திடம் வழங்கும்படி நான் கேட்டேன் என்பதைக் காட்டுவதற்கும் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வேலை தர மறுத்த பின்பு நிர்வாகத்திடம் இதுகுறித்து கடிதம் எதுவும் அனுப்பி நான் அவர்களை கேள்வி கேட்கவில்லை. என்னுடைய யுனியன் தலைவர் பஞ்சாட்சரம் மூலமாக வேலை கோரி நாங்கள் நேரடியாக வேலை கேட்டோம். நான் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு தாக்கல் செய்த

மனுவிற்கும் எதிர்மனுதார் நிறுவனத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தொழிலாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஐ.டி மனு எண் 88/2016-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்வமானது எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவில்லை என்றால் சரியல்ல. அந்த தீர்வத்திற்கும் எதிர்மனுதார் நிறுவனத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை அந்த உத்தரவானது எதிர்மனுதாரர் நிறுவனத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மனுவுடன் தாக்கல் செய்த கணக்கீட்டு பட்டியலில் நான் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் அதிமானவை என்றும் எதிர்மனுதாரர் நிறுவனம் அந்த தொகையை செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. மனுவில் நான் கோ்ரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கதக்கதல்ல மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2025.10.10 17:44:41 +0530